# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.மு.ச. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093875

1. District மாவட்டம்: விருதுநகர் PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு விருதுநகர் Year ஆண்டு: 2022 FIR No. மு.த.அ. எண்: 3/2022 Date நாள்: 26-04-2022

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of Prevention of
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Corruption (Amendment)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 25.04.2022
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 19.15 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.04.2022 Time நேரம் : 11.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் M. ரெட்டியபட்டி காவல் நிலையம். 38 km North East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பொ. தங்கமணி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பொன்னுக்கிட்டு
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி கதவு எண். 1/2, பிள்ளையார் கோவில் தெரு, இராமசாமிபட்டி, கமுதி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. இராமநாதன், தலைமை ஆய்வாளர், M. ரெட்டியபட்டி காவல் நிலையம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
வாதியால்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது :

நான் இன்று 26.01.2022 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்த போது இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகா, இராமசாமிபட்டி, பிள்ளையார் கோவில் தெரு, கதவு எண். 1/2 என்ற முகவரியை சேர்ந்த திரு.முருகன் 46/22 என்பவர் என்னிடம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அந்த புகார் மனு மீது இரகசிய விசாரணை செய்ததில் எதிரி மீது எதிர் மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A.P. [signature] 26/4/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 26.04.22 at 17.15 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BOOMINATHAN,
Rank: நிலை INSPECTOR OF POLICE, V&AC, VNR

**விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண். 03/2022 பிரிவு 7 of PC (Amendment) Act 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

இன்று 26.04.2022 தேதி 11.00 மணிக்கு விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.03/2022 பிரிவு 7 of PC (Amendment) Act 2018 ஆக திரு.இராமநாதன், உதவி ஆய்வாளர், ம.ரெட்டியபட்டி காவல்நிலையம், விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் : திரு.தங்கமணி, வயது 46/2022, த/பெ.பொன்னுக்குட்டி, கதவு எண்.1/2, பிள்ளையார் கோவில் தெரு, இராமசாமிபட்டி, கமுதி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் : காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் மாவட்டம். அய்யா, நான் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகா, இராமசாமிபட்டியில் கதவு எண்.1/2, பிள்ளையார் கோவில் தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி திருமதி.கோமதியை நான் 15 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்தேன். அதுமுதல் எனது மனைவி ஊரான தஞ்சாவூரில் விவசாயம் செய்து வந்தேன். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தான் சொந்த ஊரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அருப்புக்கோட்டை தாலுகா, தும்முசின்னம்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட ஒரு இடத்திற்கு அருப்புக்கோட்டை தாலுகா, தும்முசின்னம்பட்டியை சேர்ந்த என்னுடைய நண்பர் சோலை த/பெ சுப்பையா என்பவருக்கும், சாயல்குடியை சேர்ந்த துரைப்பாண்டி மகன் தங்கராஜ் என்பவருக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வருகிறது. அந்த பிரச்சனைக்குரிய இடத்தில் கடந்த 13.01.2022ஆம் தேதி துரைப்பாண்டி மகன் தங்கராஜ் என்பவர் கல்தூண்களை ஊன்றி கம்பி வேலி போட்டுக்கொண்டிருந்தார். அப்போது நான் என் நண்பர் சோலையுடன் சென்று பிரச்சனைக்குரிய இடத்தில் ஏன் கம்பிவேலி போட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு வந்துவிட்டோம். அதற்கு துரைப்பாண்டி மகன் தங்கராஜ் என்மீதும் திரு.சோலை மீதும் 10 நபர்களுடன் கத்தி, அருவாள் மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் வந்து தகராறு செய்ததாக கடந்த 14.01.2022 அன்று ம.ரெட்டியபட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் ம.ரெட்டியபட்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.02/2022 பிரிவு 147, 148, 447, 427, 294(b), 323, 506 (ii) IPC-இன்படி வழக்குப்பதிவு செய்தனர். அந்த வழக்கில் என்னுடைய நண்பர் திரு.சோலை கைது செய்யப்பட்டார். நான் திருவில்லிப்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு 30 நாட்கள் கையெழுத்து போடவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் முன்ஜாமின் பெற்றேன். நான் ம.ரெட்டியபட்டி காவல்நிலையத்தில் கடந்த 07.02.2022ஆம் தேதிக்கு பிறகு சுமார் 10 நாட்கள் தினமும் காலை 10.00 மணிக்கு கையெழுத்து போட்டு வந்தேன். அதன்பிறகு சுமார் 10 நாட்கள்

எனக்கு உடல்நிலை சரியில்லாததால் கையெழுத்து போடவில்லை. பின்னர் உடல்நிலை சரியாகி மீதமுள்ள சுமார் 10 நாட்கள் கையெழுத்து போட சென்றபோது என்னிடம் ம.ரெட்டியபட்டி காவல்நிலைய SI திரு.இராமநாதன் அவர்கள் ஏன் 10 நாட்களாக கையெழுத்து போடவில்லை என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் எனது உடல்நிலை சரியில்லாததால் கையெழுத்து போடவரவில்லை. நான் கையெழுத்து போடாத நாட்களுக்கு மருத்துவ சான்றிதழ் வாங்கி கொடுத்து விடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு SI அவர்கள், மருத்துவ சான்றிதழ்லாம் கொடுக்க வேண்டாம், எனக்கு நீங்க 20,000/- ரூபா கொண்டு வந்து கொடுத்திடுங்க, நீங்க 10 நாள் கையெழுத்து போடாததை, நான் கண்டுக்கிறாம கோர்டுக்கும் ரிப்போர்ட் அனுப்பாம இருந்துக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் உடல்நிலை சரியில்லாமதான் சார் கையெழுத்து போட வரமுடியாம போச்சு, அதனால நீங்க பார்த்து செய்ங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்க நான் கேட்கிற ரூபாய் 20,000/-த்தை ரெடிபண்ணி கொண்டு வந்து என்கிட்ட கொடுத்தீங்னாதான் நீங்க தப்பிக்க முடியும், இல்லைனா கோர்ட்டுக்கு ரிப்போர்ட் எழுதி உங்க முன்ஜாமீனை கேன்சல் பண்ணிடுவேன் என்று கூறினார். ஆகையால் நான் சரியென்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். பின்னர் அவர் இல்லாத நேரம் பார்த்து காவல்நிலையம் சென்று முன்ஜாமீனில் கூறியுள்ள நிபந்தனையின் பேரில் மீதமுள்ள 10 நாட்களுக்கு கையொப்பமிட்டு முடித்துவிட்டேன். இந்த சூழ்நிலையில் நான் சொந்தவேலையாக ரெட்டியபட்டி பஜார் பகுதியில் இருக்கும்போது, SI இராமநாதன் என்னை பார்க்கும் போதெல்லாம் என்னாச்சுங்க, நான் கேட்ட 20,000/- ரூபாய் என்றும், அந்த ரூபாய கொண்டு வந்து தரமாட்டிங்களா என்றும், கோர்ட்டுக்கு ரிப்போர்ட் எழுதி உங்க முன்ஜாமீனை கேன்சல் செஞ்சாதான் சரிபட்டு வருவீங்க என்று சொல்லிக்கொண்டே இருந்தார். கடைசியாக நேற்று 25.04.2022ஆம் தேதியன்று மாலை சுமார் 5.30 மணியளவில் நான் ரெட்டியபட்டி பஜாரில் நின்று கொண்டிருக்கும்போது, SI இராமநாதன் சார் என்னிடம் நீங்க ஸ்டேசனுக்கு வாங்க என்றும், உங்ககிட்ட பேச வேண்டியதிருக்கு என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் நான் உடனே ரெட்டியபட்டி காவல்நிலையத்திற்கு சென்றேன். அங்கு நிறைய ஆட்கள் அவர்களுடைய கோரிக்கைகளுக்காக SI இராமநாதன் சாரை பார்த்து சென்றுகொண்டிருந்தார்கள். ஆகையால் நான் காவல்நிலையத்திற்கு வெளியே காத்திருந்து இரவு சுமார் 7.15 மணியளவில் SI இராமநாதனை அவரது அறைக்குள் சென்று சந்தித்து, என்னா சார் ஏதோ பேசனும்னு வரச்சொன்னீங்க என்று கேட்டேன். அதற்கு அவர், ஆமாங்க, என்னாச்சுங்க நீங்க கண்டிசன் பெயில் கையெழுத்து போடாததற்கு நான் கேட்ட 20,000/- ரூபாய் என்று கேட்டார். அதற்கு நான், அவரிடம் சார் ஏற்கனவே இந்த கேசுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்ல, வெட்டியா முன்ஜாமீன் எடுக்கிறதுக்கே நிறைய செலவு பண்ணிட்டேன், உடம்புக்கு சரியில்லாம ஆஸ்பிடல்

டிரீட்மெண்ட்ல இருந்ததுனால தான் கையெழுத்து போட முடியாம போச்சு, அதனால சார் பார்த்து செய்ங்க என்று சொன்னேன். அதற்கு அவர் சரி ரூ.10,000/-த்தை குறைச்சிட்டு 10,000/-த்தையாவது ரெடிபண்ணி கொண்டுட்டு வாங்க என்றும், அந்த ரூபாய் 10,000/-த்தை ரெடிபண்ணி கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால்தான் நீங்க கையெழுத்து போடாமல் இருந்ததற்கு உங்க மீது கோர்ட்டுக்கு ரிப்போர்ட் அனுப்பாமல் இருப்பேன், குற்றப்பத்திரிக்கையிலும் உங்க பேரு இல்லாம இருக்க நடவடிக்கை எடுப்பேன் என்றும் கூறினார். ஆனால் எனக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லை. இருந்தாலும் நான் வேறுவழியில்லாமல் அப்போது அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நேற்று (25.04.2022) இரவு என்னிடம் அவ்வளவு பணம் இல்லாததால், அந்த பணம் ரூ.10,000/-ஐ இன்று (26.04.2022) காலை ரெடிபண்ணி கொண்டு, என்மீது நான் கண்டிசன் பெயில் கையெழுத்து போடாததற்கு கோர்ட்டுக்கு ரிப்போர்ட் அனுப்பாமல் இருப்பதற்கும், குற்றப்பத்திரிக்கையில் என்னுடைய பெயர் இல்லாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதற்கும் என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.10,000/- கேட்ட ம.ரெட்டியபட்டி காவல்நிலைய SI திரு.இராமநாதன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (Sd) **A.P.Thangamani** 26/04/22 Sir, Received the complaint on 26.04.2022 at 11.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case in warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in VNR V&AC Cr.No.3/2022 u/s 7 of PC (Amendment) Act 2018 on 26.4.2022 at 13.00 hrs and took up for Investigation. (Sd) R.Boominathan 26/4/22, Insp of Police, V&AC, VNR.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM / Spl. Judge for PC Act cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

Insp of Police, V&AC, VNR.